# மயிலாடுதுறை நகராட்சி

குறள்: மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

பொருள்: மனம் தூய்மையாக இருப்பதே அறம். மற்றவை
ஆராவரத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

கூட்ட எண்: 14/2022

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்:22.02.2023

சாதாரண கூட்டம்

அன்புடையீர் !

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரண கூட்டம்
நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2023–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2023 செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

**1)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர்களின் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 366 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**2)** மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை அவர்களின் கடிதம் ந.க.எண்:112/செமதொஅ/2022, நாள்:09.12.2022 கடிதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட முத்தானத் திட்டங்களான, மகளிருக்கான இலவச பேருந்துப்பயணத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கானத்திட்டம் ஆகியவற்றை பொது மக்கள் அறிந்துக்கொள்ளவும், பயன்பெறவும் பொது இடங்களில் '10X12' என்ற அளவில் விளம்பர பேனர்கள் வைத்திட இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலரால் அரசு துணை செயலாளர், தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் நேர்முக கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியால் , '10X12' என்ற அளவில் விளம்பர பேனர் வைத்திட 9 எண்ணிக்கை விளம்பரங்கள் மாதிரி மின்னஞ்சல் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்குறிய செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணி மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.35000/– (ரூபாய் மூப்பத்தைந்தாயிரம் மட்டும்) ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்கண்டப்பணியின் அவசரம் அவசியம் கருதி உள்ளூர் விளம்பர பேனர் அச்சக நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு

| வ. எ ண் | பணியின் விவரம் | பிரிண்டிங் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பெறப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ. | குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | '10X12' அளவில் Flex பேனர் அச்சடித்து அதற்கான இரும்பு சட்டத்தில் ஒட்டி, சாரம் அமைத்து, நிறுவுதல். | M/S Jay Adds, Advertising Agency, Peruncheri, Mayiladuthurai. | 3900/– | M/S Umar Adds, Sabanayagar Street, Mayiladuthurai. |
| 2 | | M/S Surya Adds, Advertising Agency, Kenikarai, Mayiladuthurai. | 4100/– | |
| 3 | | M/S Umar Adds, Sabanayagar Street, Mayiladuthurai. | 3800/– | |

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்களின் உத்தரவுப்படி , பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள கலம் எண்.5–இல் கண்டுள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்:5293/2022/எப்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 367 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு:**

**3)** மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை விதிகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு (MOHUA) துறையின் மூலம் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நட்சத்திர அங்கீகாரம் (STAR RATING) வழங்கி வருகின்றனர். அதன்படி மயிலாடுதுறை நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெறுவதற்கு பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் கருத்துகள் பெறுவதற்காக தினசரி மேலாண்மை விளம்பரத்தினை "TRINITY MIRROR" ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.33600/- வழங்கிடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்காலம்.

**<u>ந.க.எண்.166/2017/எச்1</u>**

**<u>மன்றத் தீர்மானம் எண். 368 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**4)** இந்நகராட்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்திற்கும், நகர்மன்றத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கொண்டு மாதந்தோறும் நடைபெறும் நகர்மன்ற கூட்டத்திற்கு கீழ்கண்ட பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ. எண். | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை விபரம் |
|---|---|---|
| 1 | நகர்மன்ற கூட்டத்திற்கு புதிய வால்கிளாக் கடிகாரம் (பெரியது) | 1 |
| 2 | நகர்மன்றத்தலைவர் அலுவலகத்திற்கு புதிய பிளாஸ்டிக் நாற்காலிகள் | 30 |
| 3 | நகர்மன்ற கூட்டத்திற்கு, நகர்மன்ற தலைவர் அலுவலகத்திற்கு 2 லிட்டர் அளவு சில்வர் பிளாஸ்குகள் | 2 |
| 4 | நகர்மன்றத்தலைவர் அலவலகத்திற்கு கப் & சாசர் | 6 செட் |
| 5 | நகர்மன்ற கூட்டரங்கிற்கு சிறிய காபி டம்ளர்கள் | 100 |
| 6 | நகர்மன்ற கூட்டத்திற்கு பெரிய சில்வர் தட்டுகள் | 3 |
| 7 | நகர்மன்ற கூட்டரங்கிற்கு 25 லிட்டர், 10 லிட்டர் காபி கேன்கள் | 2 |
| 8 | நகர்மன்றத்தலைவர் அலுவலகத்திற்கு கிளாஸ் | 6 |
| 9 | நகர்மன்ற தலைவர் Pen stand | 2 |
| 10 | நகர்மன்றத்தலைவர் அலுவலகம், நகர்மன்ற கூட்டரங்கிற்கு இரண்டு பெரிய அளவில் மிதியடிகள் | 2 |

மேற்கண்ட பொருட்களை மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையிலிருந்து வாங்கிடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் 75000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற கூட்டரங்கிற்கு, நகர்மன்ற அலுவலகத்திற்கு பொருட்கள் தேவைப்படுவதால் அரசு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையிலிருந்து வாங்கியதற்கு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.5121/2023/எச்1</u>**

**<u>மன்றத் தீர்மானம் எண். 369 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**5)** இந்நகராட்சியில் 2022– 2023 ஆம் நிதியாண்டிற்கு வரிவசூல் மையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர்களின் அதிக ரசீதுகள் நகல் எடுக்கப்படுவதால், 80 Column dot matrix printers இரண்டு வாங்க உத்தேச செலவினம் ரூ.75,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.5157/2022/டி2.**

**மன்றத் தீர்மானம் எண். 370 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**6)** இந்நகராட்சியில் 2022–2023– ஆம் நிதியாண்டிற்கு இவ்வலுவலக உபயோகத்திற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.4,00,000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.5609/2022/டி2.**

**மன்றத் தீர்மானம் எண். 371 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**7)** மயிலாடுதுறை நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டிற்கு சொத்துவரி வசூல் செய்வதற்கு 36 வார்டுகளுக்கும் சொத்துவரி கேட்பு அறிவிப்புகள் மற்றும் குடிநீர் கட்டணம் / பாதாளசாக்கடை கட்டணம் ஆகியவற்றில் தவறுதலாக எழுப்பட்டுள்ள கேட்புகளை ஆய்வு செய்து கண்டறியும் படிவம் மற்றும் இதர அறிவிப்புகள் அச்சிட்டு வழங்க விலைவிகிதம் 18.11.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| 1. | நாதன் லேசர் பிரிண்டர்ஸ், 64, கச்சேரி ரோடு, மயிலாடுதுறை | A4 Size ஒருகிணைந்த வரிகேட்பு படிவம் Ward wise Print out per page Charge | ரூ. 1.75/– |
| | | A4 Size Assessment Dashboard Property tax ward wise print out per page charge | ரூ.1.75/– |
| | | Binding charge | ரூ. 30/– |
| | | 1 x 8 Size அறிவிப்பு நோட்டீஸ் 1000 Copies | ரூ.600/– |
| 2. | டிஜிடெக் ஆன்லைன், 26, ரோஜா தெரு, பெசன்ட் நகர், மயிலாடுதுறை | A4 Size ஒருகிணைந்த வரிகேட்பு படிவம் Ward wise Print out per page Charge | ரூ. 2.00/– |
| | | A4 Size Assessment Dashboard Property tax ward wise print out per page charge | ரூ.2.00/– |
| | | Binding charge | ரூ. 40/– |
| | | 1 x 8 Size அறிவிப்பு நோட்டீஸ் 1000 Copies | ரூ.700/– |
| 3. | ஜெமினி பிரஸ், ரயிலடி, மயிலாடுதுறை | A4 Size ஒருகிணைந்த வரிகேட்பு படிவம் Ward wise Print out per page Charge | ரூ. 2.50/– |
| | | A4 Size Assessment Dashboard Property tax ward wise print out per page charge | ரூ.2.50/– |
| | | Binding charge | ரூ. 45/– |
| | | 1 x 8 Size அறிவிப்பு நோட்டீஸ் 1000 Copies | ரூ.650/– |

**அலுவலக குறிப்பு :** வரிசை எண்.1ல் கொடுத்துள்ள விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளி வீகிதத்தைவிட குறைவாக இருப்பதால் நாதன் லேசர் பிரிண்டர்ஸ் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5166/2022/அ1**

**மன்றத் தீர்மானம் எண். 372 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: அலுவலககுறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**8)** இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-2022** | | | | | |
| **1.** | மயிலாடுதுறை நகராட்சி, மாப்படுகை அருகே உள்ள சுடுகாடு அருகில் தண்ணீர் வசதியுடன் கூடிய நவீன ஈமக்கிரியை மண்டபம் கட்டும் பணி. | **10,00,000/-** | **திரு.எஸ்.சந்தோஷ், காண்ட்ராக்டர், சீர்காழி.** | **ரூ. 8,36,404.49/– (–) 0.13 % குறைவு** | **திரு.எஸ்.சந்தோஷ், காண்ட்ராக்டர், சீர்காழி..** |
| | | | **S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 8,40,968.49/– (+) 0.41 % அதிகம்** | |
| **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023** | | | | | |
| **2.** | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.26, கூறைநாடு, வண்டிப்பேட்டையில் புதிய அங்காடி கட்டடம் கட்டும் பணி. | **18,00,000/-** | **திரு.க.செந்தில் ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 14,36,743.48/– (–) 0.61 % குறைவு** | **திரு.கே.செந்தில், ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **E. கண்ணன் ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 15,86,106.50/– (+) 9.72 % அதிகம்** | |
| **3.** | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.19, தருமபுரம் சாலையில் புதிய அங்காடிக் கட்டடம் கட்டும் பணி. | ரூ.18,00,000/- | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ. 14,48,198.06/– (–) 0.15 % குறைவு** | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர்,.சீர்காழி..** |
| | | | **S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 14,56,615.54/– (+) 0.43 % அதிகம்** | |
| **4.** | மயிலாடுதுறை நகராட்சி, வார்டு எண்.10, காவேரி கரையில் நவீன ஈமக்கிரியை மண்டபம் கட்டும் பணிக்கு – பணி | ரூ.12,00,000/- | **திரு.G.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 9,80,720.00/– (–) 0.29 % குறைவு** | **திரு.G.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **திரு.S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 9,85,143.00/– (+) 0.16 % அதிகம்** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | வார்டு எண்.2, திருவிழந்தூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் கலையரங்கம் அமைக்கும் பணிக்கு - பணி | ரூ.8,00,000/- | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ. 6,39,914.99/– (–) 0.15 % குறைவு** | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 6,43,786.99/– (+) 0.45 % அதிகம்** | |
| 6. | மயிலாடுதுறை நகராட்சி, வார்டு எண்.4, குப்பங்குளம் சந்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் - பணி | ரூ.12,00,000/- | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ. 10,03,574.69/– (–) 0.02 % குறைவு** | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர்,.சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ. 10,04,385.69/– (+) 0.06 % அதிகம்** | |

அலுவலக குறிப்பு : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண் : 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**2. மேற்படி பணிகளுக்கு பொது மக்களின் பயன்பாட்டு அவசியம் கருதி மன்ற நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று இப்பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**

**ந.க.எண். 4536/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 373 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலககுறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**9)** மயிலாடுதுறை நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புரம்) 2.0 திட்டத்தின் கீழ் இந்நகராட்சி ஆனதாண்டவபுரம் உரக்கிடங்கில் குவிந்துள்ள 31127 கன மீட்டர் அளவு கொண்ட பழங்கால **(Legacy waste)** கழிவுகளை நுண்ணுயிர் உயிரி அகழ்வு **(Bio Mining)** முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு 06.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளஇரண்டு நிறுவனத்தின்பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | விலைக்குறைப் பின்படி நிறுவனத்தார் சம்மதம் தெரிவித்துள்ள தொகை | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின்பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | இந்நகராட்சி ஆனதாண்டவ புரம் உரக்கிடங்கில் குவிந்துள்ள 31127 கன மீட்டர் அளவு கொண்ட பழங்கால **(Legacy waste)** கழிவுகளை நுண்ணுயிர் உயிரி அகழ்வு **(Bio Mining)** முறையில் அப்புறப்படுத்தும் பணி | ரூ. 1,90,000,00/- | **M/S.Parisudh Eco Concepts Pvt Ltd., No.37, Teachers Colony, Kamarajar Avenue, Adayar. Chennai - 600020** | ரூ.1,93,79, 980 /– (+) 14.92 % அதிகம் | ரூ.1,68,14,250 /– (-) 0.30 % குறைவு | **M/S.Parisudh Eco Concepts Pvt Ltd., No.37, Teachers Colony, Kamarajar Avenue, Adayar. Chennai - 600020** |
| | | | **Green Ethics Private Limited. No.78/10 Old State Bank Colony, Main Road, West Tambaram, Chennai – 600 045** | தொழில் நுட்ப தகுதியினை பூர்த்தி செய்யவில்லை. | | |

அலுவலககுறிப்பு.

பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 7ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளினை ஏற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண். 4421/2022/இ1

மன்றத் தீர்மானம் எண். 374 நாள்: 28.02.2023

அலுவலக குறிப்பு: அலுவலககுறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10).** மயிலாடுதுறை நகராட்சி வாகன ஓட்டுநர் திரு. R.மோகன் குப்பை அள்ளும் வாகனம் TATA AC வாகனம் எண் TN 82 H 0328 பயன்படுத்துவதற்கு மின் கலப்பெட்டி (பேட்டரி) பழுதாகி விட்டதால் புதிதாக மின் கலப்பெட்டி (பேட்டரி) வாங்கி வழங்க கோரியுள்ளதின் பேரில் துப்புரவு ஆய்வர் தனது 10.01.2023 குறிப்பில் புதிய மின்கலப்பெட்டி வாங்கி வழங்கலாம் என தெரிவித்துள்ளார். எனவே மின்கலப்பெட்டியின் உத்தேச செலவினம் தொகை ரூ.5000/– (ஐந்தாயிரம் மட்டும்)–க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசரம் அவசியம் கருதி மின்கலப்பெட்டி வாங்கி கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 197/2023/எச்4**

**மன்றத் தீர்மானம் எண். 375 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**11).** இந்நகராட்சியின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தினை இளநிலை பகுப்பாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து பிரதி மாதமும் ஆய்வு செய்து அறிக்கை பெற்றிட ஆண்டொன்றிற்கு (ஜனவரி –2023 முதல் டிசம்பர் –2023 வரை) ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும். இத்தொகையினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மாதாந்திர அடிப்படையில் ஆய்வகங்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.5961/2010/இ2**

**மன்றத் தீர்மானம் எண். 376 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**12)** மயிலாடுதுறை நகராட்சி கல்வி நிதி மற்றும் வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 24.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| | | | கல்வி நிதி | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான திருவிழந்தூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அதி நவீன Smart Class Room மற்றும் இதர உபகரணங்கள் பொருத்தும் பணி | 9,90,000/– | M/S Treasure Envision, Madurai. | ரூ.823102.78 (-) 0.31% குறைவு | M/S Treasure Envision, Madurai. |
| | | | M/S JMD Solution, Madurai. | ரூ.826865.59 (+) 0.15% அதிகம் | |
| 2. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான கவிஞர் வேதநாயகம் நகராட்சி துவக்கப்பள்ளியில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அதி நவீன Smart Class Room மற்றும் இதர உபகரணங்கள் பொருத்தும் பணி | 9,85,000/– | M/S Treasure Envision, Madurai. | ரூ. 821569.80 (-) 0.31% குறைவு | M/S Treasure Envision, Madurai. |
| | | | M/S JMD Solution, Madurai. | ரூ.825195.05 (+) 0.13% அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான தியாகி ஜி.நாராயணசாமி மேல்நிலைப்பள்ளியில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அதி நவீன Smart Class Room மற்றும் இதர உபகரணங்கள் பொருத்தும் பணி | 9,85,000/– | **M/S Treasure Envision, Madurai.** | **ரூ. 821569.80 (-) 0.31% குறைவு** | M/S Treasure Envision, Madurai. |
| | | | **M/S JMD Solution, Madurai.** | **ரூ.825195.05 (+) 0.13% அதிகம்** | |
| 4. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அதி நவீன Smart Class Room மற்றும் இதர உபகரணங்கள் பொருத்தும் பணி. | 9,90,000/– | **M/S Treasure Envision, Madurai.** | **ரூ.823102.78 (-) 0.31% குறைவு** | M/S Treasure Envision, Madurai. |
| | | | **M/S JMD Solution, Madurai.** | **ரூ.826865.59 (+) 0.15% அதிகம்** | |
| | | | பொது நிதி | | |
| 5. | மயிலாடுதுறை நகராட்சியில் மாண்டஸ் புயல் முன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்ட கன மழையின் காரணமாக வார்டு எண்.1 முதல் 12 வரை சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி | 9,20,000/– | **கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ.798096.00/– (–) 0.09 % குறைவு** | **கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.771120.00 /– (+) 0.22 % அதிகம்** | |
| 6. | மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் குடியிருப்பு மேல் தளத்தில் பராமரிப்பு பணி. | 5,20,000/– | **G.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ.357655.51 /– (–) 0.15 % குறைவு** | **G.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **M/s.SVS Engineering, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ.359007.50 /– (+) 0.23 % அதிகம்** | |

<u>அலுவலககுறிப்பு</u> : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.4997/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 377 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு:** அலுவலகக்குறிப்பு 1 முதல் 5 வரையில் உள்ள பொருள்களுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களுக்கு வேலை உத்தரவு வழங்கிடுவதற்கு அனுமதிக்கப்பட்டது. வரிசை எண்.6–ல் உள்ள பணிக்கு நகராட்சியில் தற்போது பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் இந்த பணியினை மேற்கொள்ள வேண்டாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**13) மயிலாடுதுறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 24.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| | | | **பொது நிதி** | | |
| **1.** | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.1, தீப்பாய்ந்தாள் அம்மன் கோவில் தெரு – திருமஞ்சன வீதி ஆகியவற்றை இணைக்கும் காவேரி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள நடைபாலத்தை சீரமைக்கும் பணி. | ரூ.1,10,000/– | **G.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ.89678.04 /– (–) 0.09 % குறைவு** | **G.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **M/s.SVS Engineering,** ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | **ரூ.89819.04 /–** *(+) 0.06 % அதிகம்* | |
| **2.** | மயிலாடுதுறை நகராட்சியில் மாண்டஸ் புயல் முன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்ட கன மழையின் காரணமாக வார்டு எண்.25 முதல் 36 வரை சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி | ரூ.9,36,000/– | **கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ.780288.00/– (–) 0.09 % குறைவு** | **கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.783360.00 /– (+) 0.31 % அதிகம்** | |

<u>அலுவலககுறிப்பு</u> : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்..4997/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 378 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

14) மயிலாடுதுறை நகராட்சி கல்வி நிதி மற்றும் வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 25.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| | | **கல்வி நிதி** | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான 13 எண்ணிக்கையிலான நகராட்சி பள்ளிகளில் தானியங்கி மின்சாரமணி மற்றும் கிட்டப்பா உயர்நிலைப் பள்ளியில் கூடுதலாக 8 எண்ணிக்கை ஆசிரியர்கள் எழுதும் பச்சை வண்ணம் பலகை **(Ceramic Coated Megnatic Steel Green Teachers Writing Board)** ஆகியவை பொருத்தும் பணி | 8,00,000/– | **M/S Treasure Envision, Madurai.** | ரூ. 669800.00 (-)0.17% குறைவு | **M/S Treasure Envision, Madurai.** |
| | | | M/S JMD Solution, Madurai. | ரூ.671940.00 (+) 0.15% அதிகம் | |
| 2. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான தியாகி ஜி.நாராயணசாமி மேல்நிலைப் பள்ளியில் மற்றும் திருவிழந்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் எழுதும் பச்சை வண்ணப் எழுத்துப்பலகை **(Ceramic Coated Megnatic Steel Green Teachers Writing Board)** பொருத்தும் பணி | 9,70,000/– | **M/S Treasure Envision, Madurai.** | ரூ. 807650.00 (-) 0.18% குறைவு | **M/S Treasure Envision, Madurai.** |
| | | | M/S JMD Solution, Madurai. | ரூ.809970.00 (+) 0.11% அதிகம் | |
| 3. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான கூறைநாடு கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர்கள் எழுதும் பச்சை வண்ணப் எழுத்துப்பலகை **(Ceramic Coated Megnatic Steel Green Teachers Writing Board)** பொருத்தும் பணி | 9,40,000/– | **M/S Treasure Envision, Madurai.** | ரூ. 779800.00 (-) 0.18% குறைவு | **M/S Treasure Envision, Madurai.** |
| | | | M/S JMD Solution, Madurai. | ரூ.782040.00 (+) 0.11% அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான 10 எண்ணிக்கையிலான நகராட்சி பள்ளிகளில் ஆசிரியர்கள் எழுதும் பச்சை வண்ணம் பலகை **(Ceramic Coated Megnatic Steel Green Teachers Writing Board)** பொருத்தும் பணி | 9,40,000/– | **M/S Treasure Envision, Madurai.** | ரூ.779800.00 (-) 0.18% குறைவு | **M/S Treasure Envision, Madurai.** |
| | | | **M/S JMD Solution, Madurai.** | ரூ.782040.00 (+) 0.11% அதிகம் | |
| பொது நிதி | | | | | |
| 5. | மயிலாடுதுறை நகராட்சியில் மாண்டஸ் புயல் முன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்ட கன மழையின் காரணமாக வார்டு எண்.13 முதல் 24 வரை சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி | 9,00,000/– | கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ.749808.00/– (–) 0.09 % குறைவு | கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. |
| | | | S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை. | ரூ.752760.00 /– (+) 0.31 % அதிகம் | |
| 6. | மயிலாடுதுறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் சேகரம் செய்யப்படும் நெகிழிப்பைகளை கட்டி அகற்ற தேவையான BAILING MECHINE கொள்முதல் செய்யும் பணி. | ரூ.9,80,000/– | M/s.MRR Suppliers, No.207, Strahans Road, Pattalam, Chennai –012. | ரூ.979400.00 /– 0.00 % மதிப்பீட்டு அளவு | M/s.MRR Suppliers,No.207, Strahans Road,Pattalam, Chennai – 600 012. |
| | | | M/s.SB & Co., No.115/90B, 2nd Floor, Perambur, Chennai – 600 011 | ரூ.985000.00 /– *(+) 0.57 % அதிகம்* | |

<u>அலுவலககுறிப்பு</u> : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.4997/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 379 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**15)** மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0, 2022–2023 திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 25.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள்/ நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| தூய்மை இந்தியா திட்டம் 2.0, 2022–2023 | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி ஆனதாண்டவபுரம் உரக்கிடங்கில் Resource Recovery Center அமைக்கும் பணி | 43,00,000/– | M/S.SVS Engineering Contrator, Mayiladuthurai. | ரூ.3617688.75/– (-) 0.02% குறைவு | M/S.SVS Engineering Contrator, Mayiladuthurai. |
| | | | M/S. S. Karthikeyan, South Street, Thalainayeru, pattavarthi, Mayiladuthurai | ரூ.3639919.75/– (+) 0.59% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u> : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.5530/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 380 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலககுறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**16)** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை சட்டம் 2016–ன் கீழ் நடைமுறைப்படுத்தப்படு, நகரில் உள்ள 36 வார்டுகளில் தினசரி சேகரமாகும் மக்கும், மக்காத குப்பைகளை நகராட்சி;ககு சொந்தமான மூன்று நுண் உயிரி கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. இவற்றில் மக்கும் குப்பை கொண்டு உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மக்காத குப்பை மறு சுழற்சிக்குட்படுத்தப்பட்ட கழிவு பிளாஸ்டிக்குகள் வாரம் ஒரு முறை அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு நகராட்சி சொந்த பொறுப்பிலேயே கொண்டு செல்லப்பட்டு வருகிறது. இந்நிலையில் மறு சுழற்சி கழிவு பிளாஸ்டிக்குகளை ஈரோட்டினை சேர்ந்த "திரன் மாதேஷ் & கோ'' என்ற நிறுவனம் தமது சொந்த பொறுப்பிலேயே பிளாஸ்டிக்குகளை பிரித்து எடுத்துக்கொண்டு அதற்காக விலையினை குப்பைகள் டன் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் நகராட்சிக்கு செலுத்திடுவதாக தெரிவித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அவர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு இவ்வாணையினைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கிடவும், வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியில் தினசரி அதிகளவில் பிளாஸ்டிக் குப்பைகள் சேகரமாகி கொண்டு இருப்பதால் நகரம் முழுவதும் குப்பைகள் தேங்கிய நிலையில் உள்ளதாலும் மாதேஷ் & கோ நிறுவனம் தமது சொந்த பொறுப்பிலேயே பிளாஸ்டிக் குப்பைகளை எடுத்து செல்வதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 655/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 381 நாள்: 28.02.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**17)** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகரில் உள்ள 36 வார்டுகளின் 550 தெருக்களிலிருந்து பொது மக்களிடம் இருந்த மக்கும், மக்காத குப்பைகள் பெறப்பட்டு அவற்றை நகராட்சிக்கு சொந்தமான மூன்று நுண் உயிர் கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாறு மக்கும் குப்பைகள் நுண் உயிர் இயந்திரம் மூலம் தினசரி உரம் தயாரிக்கப்படுகிறது. நுண் உயிர் இயந்திரம் அடிக்கடை பழுது ஏற்படுவதால் இயங்கப்படாமல் இருப்பதால் உரம் தயாரிக்கும் பணி பாதிப்படைவதுடன் மக்கும் குப்பைகள் தேக்கம் அடைந்து வருகிறது. மேற்படி மூன்று உயில் கிடங்கின் இயந்திரத்தினை ஆண்டு பராமரிப்புக்கு ஒரு MCC– ரூ.150000/– வீதம் மூன்றாண்டுக்கு ரூ.450000/– பராமரிப்பு செலவுகள் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 382 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> நகராட்சி நுண்ணுயிர் கிடங்கிற்கு பராமரிப்பு ஒரு ஆண்டுக்கு என்பதற்கு ஆறு மாத காலத்திற்கு அதற்கான செலவுத்தொகை ரூ.2,25,000/– மட்டும் செலவுகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**18)** மயிலாடுதுறைநகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும், நிலுவையாக உள்ள பாதாளசாக்கடை கட்டணத்தை வசூல் செய்வதற்கு கேட்பு அறிவிப்புகள் (Demand Notice) அனைத்து வார்டுகளில் உள்ள அனைத்து குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவிப்பு வழங்கப்படும்போது பாதாளசாக்கடை இணைப்பிற்கு இணைப்பு வழங்கப்படாமலேயே தவறுதலாக தொடர்ந்து கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும், இணைப்பு வழங்கப்பட்ட தேதிக்கு பதிலாக வைப்பு தொகை செலுத்திய நாளிலிருந்து கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும், தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை ரத்துசெய்து தருமாறும் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளன. இப்புகார்களை சரிசெய்திட வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்கள் களஆய்வு மேற்கொண்டு அறிக்கை வழங்கியுள்ளதை வருவாய் ஆய்வர்கள் மற்றும் வருவாய் அலுவலர் உதவிப்பொறியாளர்கள் மேலாய்வு மேற்கொண்டு தவறாககேட்பு எழுப்பப்பட்டுள்ள பாதாளசாக்கடை கேட்புகளை நீக்கம் செய்திட வழங்கிய சான்றின்படியும் நீக்கம் செய்யபட வேண்டிய கேட்புகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப்பபட்டுள்ளது. இதன் நிலுவைத் தொகை**ரூ.30,35,426/-**ஆகும். இதில் இதுநாள்வரை பாதாளசாக்கடை வைப்புத்தொகை செலுத்தி இணைப்பு பெறாமல் உள்ள மொத்த கேட்புகளின் நிலுவைத்தொகைரூ.27,92,700/-ஐ இணைப்பு பட்டியல்-1 ஆகவும், பாதாளசாக்கடை வழங்கப்பட்ட தேதிக்கு பதிலாக முன் வைப்புத்தொகை செலுத்திய நாளிலிருந்து கேட்பு எழுப்பப்பட்டு தொகை செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ள கேட்புகளின் நிலுவைத் தொகைரூ. 2,42,726/-ஐ இணைப்பு பட்டியல்-2 ஆகவும் இணைக்கப்பட்டுள்ளது எனவே இணைப்புப் பட்டியல் 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள கேட்புகளை உரியவாறு (மொத்தம் ரூ.30,35,426/-) நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பாதாளசாக்கடை இணைப்பிற்கு இணைப்பு வழங்கப்படாமலேயே தவறுதலாக தொடர்ந்து கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளதையும், இணைப்பு வழங்கப்பட்ட தேதிக்கு பதிலாக வைப்புதொகை செலுத்திய நாளிலிருந்து எழுப்பப்பட்டுள்ள கேட்புகளின் நிலுவைத்தொகை ரூ.30,35,426/-நீக்கம் செய்திடமன்றத்தின் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:7724/2023/இ3**

**<u>மன்றத் தீர்மானம் எண். 383 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> அலுவலகக்குறிப்பு ஏற்று பாதாள சாக்கடைத்திட்டம் தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்ட தொகை ரூ.30,85,426/– நீக்கம் செய்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.**

**19)** மயிலாடுதுறை நகராட்சியில் வாகன போக்குவரத்து நெறிசல் உள்ள இடங்கள் மற்றும் பள்ளி வளாகங்கள் அமைந்துள்ள இடங்கள் கோவில் வீதிகள் மற்றும் முக்கிய வீதிகளில் சாலை விபத்து ஏற்படுவதை தடுக்க 25 எண்ணிக்கையில் வேகதடைகள் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். மேலும் இதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:7724/2023/இ3**

**<u>மன்றத் தீர்மானம் எண். 384 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கப்பட்டது.**

**20)** மயிலாடுதுறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022–ன்கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் (ம) நூலக கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை பிப்ரவரி 2023ம் மாதத்திற்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சி நூலக கட்டடம் ஆணையர் குடியிருப்பு பின்புற சுற்றுச்சுவர், மாணவியர் விடுதி சுற்றுச்சுவர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய டிராஸ்பார்மர் பின்புற சுவர் ஆகியவற்றிற்கிடையே உள்ளது. இவற்றின் நீளங்கள் தேவைக்கும் சற்று அதிகமாக இருப்பதால் அவற்றின் குறுக்கே PCC 1:3:6 காண்கீரிட் சிறிய உயர சுவர் எழுப்பி அதனுள் மண் நிரப்பி அதனுள் Paver Block பதிக்க வேண்டியுள்ளது.

மேலும் EB – 3 Phase Power Supply மூன்று (ம) அதற்கு குறையாத மின் கம்பங்கள் அமைத்து நூலகத்திற்கு மின் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட இரண்டு பணிகளுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.**9.50** இலட்சம் ஆகும். மேலும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0696/2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 385 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.</u>**

**21)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கடைகளுக்கான தொழில்வரி விதிப்பு கேட்பில் உள்ளவைகளில் இரட்டை கேட்பிற்கான வரிவிதிப்புகள் மற்றும் இடிந்த நிலையில் உள்ள கடைகள், வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட கடைகள், காலி செய்யப்பட்ட வரிவிதிப்புக்களின் தொழில்வரி, மற்றும் ஆக்கிரமிப்பில் அகற்றப்பட்ட கடைகளின் தொழில்வரி விதிப்பு கேட்புகளை நீக்கம் செய்திட வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர்களால் களஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி நாளது தேதிவரை 4 (12,13,16,17) வார்டு பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொழில்வரி விதிப்புகளின் உள்ள கேட்புகளை வசூல் செய்ய எவ்வித வழிவகையும் இல்லை என வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர்களால் தெழில்வரி விதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து சான்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழங்கப்பட்டிருக்கின்ற சான்றின் அடிப்படையில், மேற்படி நீக்கம் செய்ய வேண்டியத் தொழில்வரி விதிப்புகளின் எண்ணிக்கை 57 ஆகும். மேற்படித் தொழில்வரிக்கோப்புகளில் நிலுவையாக ரூ.6,75,027/-மும் நடப்புத் தொகையாக ரூ.1,52,302/- மும் ஆகக்கூடுதல் தொகையாக ரூ.8,27,329/-ம் ஆகும். மேற்கண்டவாறு பட்டியல் தயார் செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பட்டியலில் உள்ள கேட்புகளை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:653/2023/அ6**

**<u>மன்றத் தீர்மானம் எண். 386 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> தொழில்வரி கேட்பில் தவறுதலாக கேட்பு எழுப்பட்ட தொகை ரூ.8,27,329/– (6,75,027 + 152302) நீக்கம் செய்திடுவதற்கு மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.**

**22)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தெருநாய்களுக்கு **36** வார்டுகளிலும் உள்ள தெருக்களில் பராமரிப்பின்றி சுற்றித்திரியும் நாய்களை (ஆண், பெண்) கும்பகோணம் பீப்பிள் ஃபார் அனிமல் சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்தார் மூலம் நாய்களை பிடித்து நவீன கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றில் நாய் ஒன்றுக்கு கட்டணமாக ரூ.700/– என வழங்கப்பட்டு வந்தது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (MA(IV) Department ) மூலம் அரசு ஆணை எண்.GO(MS) No.181-ன்படி தற்போது நாய் ஒன்றுக்கு கட்டணமாக ரூ.1450/- உயர்த்தப்பட்டுள்ளபடி தொகை வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

இதனால், ஒரு ஆண்டிற்கு ஏற்படக்கூடிய தோராய செலவினம் தொகை ரூ.**8,00,000/–** (எட்டு இலட்சம் மட்டும்)–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.348/2022/எச்2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 387 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.</u>**

**23)** மயிலாடுதுறை நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணி திரு. K.S. ராகவ் என்பவர் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பிடித்தம் செய்யப்பட்ட முன்வைப்புத்தொகை வழங்கிடக்கோரியுள்ளதன் பேரில், மேற்படி முன்வைப்புத்தொகைகள் காலங்கடந்துவிட்டப்படியால் காலங்கடந்த முன்வைப்புத்தொகைகள் பதிவேட்டில் இருந்து கீழ்காணும் விவரப்படி வழங்கலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | EMD தொகை | EMD வைப்புத்தொகை பதிவேடுகள் / பக்கம் எண்/ வரிசை எண். |
|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2019/2019 நிதியின் கீழ் எண்ணிக்கை LCV வாகனம் வாங்கும் பணிக்கு | 33600 | Losped Depposit vol –VII பக்கம் எண்.24 வரிசை எண்.1241 |
| | **மொத்தம்** | **33600** | |

மேற்படி பணிக்கு (EMD) முன்வைப்புத்தொகை ரூ.**33600/–** காலங்கடந்த முன்வைப்புத்தொகை பதிவேட்டில் இருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2573/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 388 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.</u>**

**24)** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆனதாண்டவபுரம் சாலையிலுள்ள உரக்கிடங்கினை மண்களை சமன் செய்யும் பொருட்டு கும்பகோணம் வேளாண்மை பொறியியல் துறையிடமிருந்து வாடகைக்கு டோசர் பெறப்பட்டு மண்களை சமன் செய்ய உத்தேச தொகை ரூ.4.00 லட்சம் இந்நகரமன்ற தீர்மான எண்.222 நாள்.25/10/2017 அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி கும்பகோணம் வேளாண்மை பொறியியல் நிறுவனத்திலிருந்து டோசர் வாடகைக்கு பெறப்பட்டு மண்தள்ளும் இயந்திரம் எண்.B-50-99 கடந்த 2017 –2018 மற்றும் 2019–20 ஆண்டுகளில் 1235.5 மணி நேரம் பணி செய்யப்பட்டுள்ளதாகவும் மணி ஒன்றிற்கு ரூ.840/– வீதம் ரூ.10,37,820/– என வழங்கப்பட வேண்டும் என துப்புரவு ஆய்வாளர்கள் சான்று அளித்துள்ளார்கள். மேலும் உதவி செயற்பொறியாளர்(வே.பொ)(பொ) வேளாண்மை துறை திருபுவனம், கும்பகோணம் கடித எண். ஈ/2036.2018 நாள்.23.06.2022– படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் உத்தரவுபடியும், மேற்படி நிலுவைத்தொகை ரூ.10,37,820/– வழங்கப்படவேண்டும். எனவே, மேற்படி தொகையினை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3753.2016.எச்–1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 389 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**25)** மயிலாடுதுறை நகராட்சியின் மூலம் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட (I&A) நிதியயின் கீழ் ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்தநிலைய கட்டுமான பணிகளை மூன்றாம் நபர் ஆய்வு (Third Party Inpection) மேற்கொள்வதற்கு தஞ்சாவூரிலுள்ள பெரியார் மணியம்மை பல்கலைக்கழகப்பொறியியல் துறையை கேட்டுக்கொண்டதன்படி, மேற்படி மூன்றாம் நபர் ஆய்வு (Third Party Inpection) மேற்கண்டமைக்கான கட்டணத்தொகை ரூ.11,800/–ஐ வழங்கிட கோரி தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக பொறியியல் துறையிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி பட்டியல் தொகை ரூ. 11,800/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. புதிய பேருந்த நிலையப்பணிகள் முடிவுறும் வரை மூன்றாம் நபர் ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதால், அவ்வப்போது மேற்படி நிறுவனத்தின் (Third Party Inpection) ஆய்வறிக்கையின்படி வழங்கப்பட வேண்டிய உத்தேச செலவினத்தை ரூ.3.00 இலட்சம் ஆகும். இதனை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4812/2016/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 390 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**26)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள STP கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Inlet மற்றும் Outlet கழிவு மாதிரிகளை மாதந்தோறும் தரப்பரிசோதனை செய்து அறிக்கை பெற்றிட (ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை 12 மாதங்களுக்கு) ஆகும் உத்தேச செலவீனம் ரூ.72,240/– (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து கேட்பின் அடிப்படையில் அவ்வப்போது மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் நாகப்பட்டினம் அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்

**ந.க.எண்.7724/99/இ3**

**மன்றத் தீர்மானம் எண். 391. நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**27) 31 -வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஜெயலெட்சுமி முருகன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட அல்லிகுளம் சந்துரோடு புதியதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீ பிடாரி அம்மன் ஆலயத்திற்கு மின் கம்பி அமைத்து மின்விளக்கு பொருத்தி தர மன்றம் தீர்மானிக்க
2. தனது வார்டுக்குட்பட்ட அல்லிகுளம் சந்துரோட்டிற்கு சிமெண்ட் சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க
3. அறுபத்து மூவர் பேட்டை மேலத்தெருவில் பிள்ளையார்கோயில் சுற்றி சிமெண்ட் தளம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 392 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதி நிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**28) 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. அ. ராமச்சந்திரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட அனைத்து மழைநீர் வடிகாலும், சாலையும் வடிகாலும் ஒரே சமநிலையில் உள்ளதால் அதனை புதுப்பிக்க வேண்டி மன்றம் தீர்மானிக்க,
2. தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் கீழ வீதியில் உள்ள பாலம் மற்றும் வாய்க்காங்கரை தெருவில் உள்ள பாலம் மிகவும் மோசமான நிலையில் பழுது அடைந்துள்ளது. அதனை சீர் செய்ய வேண்டி மன்றம் தீர்மானிக்க,
3. தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் கீழ வீதியில் உள்ள ரூபி காம்ளக்ஸ் சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அங்கு 60 குடியிருப்புகள் உள்ள பகுதி ஆதலார் உடனே நடவடிக்கை வேண்டி மன்றம் தீர்மானிக்க,
4. தனது வார்டுக்குட்பட்ட மினி டேங்க் பம்ப் நான்கு பழுது அடைந்து உள்ளன. அதை சீர் செய்ய வேண்டி மன்றம் தீர்மானிக்க,
5. தனது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருகளிலும் மின் விளக்கு வேண்டி மன்றம் தீர்மானிக்க,

**மன்றத் தீர்மானம் எண். 393 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டத நிதி நிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**29) <u>18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ச. காந்திராஜா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-</u>**

1. மயிலாடுதுறை நகரப்பகுதியில் அமைந்துள்ள மகளிருக்கு என்று தனியாக அரசினர் கல்லூரி அமைந்துள்ளது. மேற்படி கல்லூரியி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாக இளங்கலை வணிகவியல் (B.com) பாடத்திட்டம் துவங்கப்பட்டது. மேற்படி கல்லூரியில் வணிகவியல் முதுநிலை (M.com) பாடத்திட்டம் வகுப்புகள் துவங்க வேண்டும் என மயிலாடுதுறை நகர்மன்றத்தின் வாயிலாக அரசுக்கு பரிந்துரை செய்திட வேண்டி மன்றம் தீர்மானிக்க.

2. மயிலாடுதுறை மாவட்டம் புதியதாக துவங்கப்பட்டுள்ளது. மேற்படி மாவட்டத்தில் 10–ஆம் வகுப்பு அடிப்படையாக கொண்ட தொழிற்நுட்ப கல்லூரி இல்லாததால் மாவட்டப்பகுதி மாணவர்கள் அருகில் உள்ள மாவட்டத்தில் கல்வி பயில்வதற்கு செல்லும் நிலை உள்ளது. எனவே மயிலாடுதுறை மாவட்டத்திலேயே, நகராட்சிக்கு உட்பட்ட பகுதியிலேயே (ITI) தொழிற்நுட்ப கல்லூரி அரசின் சார்பாக புதிதாக அமைந்திடுவதற்கு அவசியம் பரிந்துரை செய்திட வேண்டி மன்றம் தீர்மானிக்க.

<u>மன்றத் தீர்மானம் எண். 394 நாள்: 28.02.2023</u>

<u>அலுவலக குறிப்பு:</u> **தீர்மானம் 1–ல் உள்ள மயிலாடுதுறை நகரில் உள்ள அரசின் மகளிர் கலைக்கல்லூரியில் முதுகலை வணிகவியல் பாடவகுப்பு** (M.com) புதிதாக துவங்கிடுவதற்கு அரசின் உயர்கல்வித்துறைக்கு மன்றம் பரிந்துரை செய்திட தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 2–இல் உள்ள மயிலாடுதுறை மாவட்டத்தில் (ITI) தொழிற்நுட்ப பாட வகுப்புக்கு அரசின் கல்லூரி இல்லாததால் புதிதாக மாவட்டத்தில் துவங்கிடுவதற்கு அரசிடம் பரிந்துரை செய்திட தீர்மானிக்கப்பட்டது.

**30) <u>20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. தனலெட்சுமி அரங்கநாதன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-</u>**

1. தனது வார்டுக்குட்பட்ட தெருக்களில் மின் விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாவதால்,

1. திருவிழந்தூர் நகர் மண்ரோடு
2. ராமஜெயபுரம் நகர்,
3. புதிதாக பெயரிடப்பட்டுள்ள அம்பேத்கர் நகர்
4. அண்ணா நகர் இரண்டாவது கிராஸ் முல்லை தெரு
5. புது அக்ரகாரம் விரிவாக்கம்

இந்த ஐந்து தெருக்களில் மின் கம்பி இழுத்து, மின்விளக்கு போட்டு தர வேண்டி மன்றம் தீர்மானிக்க.

2. தனது வார்டுக்குட்பட்ட பெரிய சந்தில் கடந்த 30 வருடகாலமாக எந்தவொரு தார்சாலையும் போடப்படவில்லை. பள்ளி மாணவர்கள் பள்ளிக்கு செல்ல மிகவும் சிரமபடுவதால், நகர்மன்ற தலைவர் எந்தவித பாரபட்சமில்லாமல் தனது வார்டில் உள்ள மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்றி தர மன்றம் தீர்மானிக்க.

<u>மன்றத் தீர்மானம் எண். 394 நாள்: 28.02.2023</u>

<u>அலுவலக குறிப்பு:</u> **பதிவு செய்யப்பட்டது. மேலும் தீர்மானம் எண்ணில் திருவிழந்தூர் என்பதற்கு திருவள்ளுவர் நகர் என திருத்தம் செய்திடவும், அம்பேத்கார் நகருக்கு பதிலாக அப்துல்கலாம் நகர் என திருத்தம் செய்திடவும் நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.**

**31) 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. து. ருஷிக்குமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட டெலிபோன் காலனியில் உள்ள பூங்கா பராமரிப்பு அற்று குப்பை கிடங்காக உள்ளதை சீர் செய்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர மன்றம் தீர்மானிக்க.

2. தனது வார்டுக்குட்பட்ட திருமஞ்சனவீதி லைன்கரையோரம் உள்ள 20க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழக்கிட மன்றம் தீர்மானிக்க.

3. தனது வார்டுக்குட்பட்ட தோப்பு தெருவில் மினிபவர் டேங் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க,

**மன்றத் தீர்மானம் எண். 396 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**32) 24-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. வளர்மதி தெய்வநாயகம் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட கலைஞர் காலனி பகுதி, முற்றிலும் குடிசை பகுதியாக இருப்பதால் இந்த தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

2. தனது வார்டுக்குட்பட்ட சின்னக்கண்ணாரத்தெருவிற்கு தார்சாலை அமைத்துதர வேண்டி மன்றம் தீர்மானிக்க.

3. தனது வார்டுக்குட்பட்ட அய்யாரப்பர்கீழவீதியில் உள்ள தண்ணீர் டேங்கில் மின்மோட்டார் பழுதாகி உள்ளதை சீர்செய்து தர மன்றம் தீர்மானிக்க.

4. தனது வார்டுக்குட்பட்ட திருவாரூர் சாலை பகுதியில் உள்ள அய்யாரப்பர் நகரில் 30 வீடுகள் உள்ளதால் அப்பகுதியில் பாதாள சாக்கடை குழாய் தொட்டி அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 397 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**33) 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S. கீதா செந்தில்முருகன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட கீழ உடையார் தெரு படித்துறை அருகில் ஈமச்சடங்கு மண்டபம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

2. தனது வார்டுக்குட்பட்ட மேல உடையார் தெரு படித்துறை (காவேரிக்கரை) பாலம் முழுவதும் சேதமடைந்துள்ளதால் அதனை சீர்செய்து தர மன்றம் மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 398 நாள்: 28.02.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**<u>34) 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச. ரெத்தினவேலு அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-</u>**

தனது வார்டுக்குட்பட்ட பெரிய எரகலித்தெரு பிள்ளையார் கோயில் மின் கம்பத்தில் அதை ஒட்டி அடுத்த மின்கம்பத்தில் தெரு விளக்கு மின் கம்பி இதுவரை இல்லை எனவும், மேற்கண்ட இடத்தில் விபத்துகளும், பொதுமக்கள் சென்று வர அச்சப்படுவதால் மேற்கண்ட இரு மின் கம்பங்களுக்கு இடையே தெருவிளக்கு மின் கம்பி பொருத்தி தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**<u>மன்றத் தீர்மானம் எண். 398 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u> பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**35)** மயிலாடுதுறை நகராட்சியில் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் இந்நகராட்சி வார்டு எண்.**21**–இல் வசிக்கும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி அமைக்கப்படுவதன் அவசியம் கருதி ரூ.**56.00** லட்சம் மதிப்பீட்டில் இப்பணியினை மேற்கொள்ள பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்படி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்க இந்நகராட்சியில் போதிய இடவசதிகள் இல்லாத காரணத்தினால் தருமை ஆதினத்திற்கு சொந்தமான தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி அருகில் உள்ள வார்டு எண்.8, பிளாக் எண்.14, நகரளவு எண்.662–இல் 1970 சதுரடி பரப்பளவு உள்ள இடத்தினை ஆண்டு வாடகை அடிப்படையில் இந்நகராட்சிக்கு வழங்கிட தருமை ஆதீனத்திடம் கோரிட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்.5451/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 400 நாள்: 28.02.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு:</u>** **தருமை ஆதீனம் இடத்திற்காக கோரும் தொகையினைகுடிநீர் நிதியிலிருந்து செலுத்திடுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.**

(ஒம்./ ந.செல்வராஜ்)
நகரமன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர் (பி)
மயிலாடுதுறை நகராட்சி.